que faisait N. S. Jésus-Christ pendant quarante jours?	சேசுநாத சுவாமி நாற்பது நாளும் என்ன செய்துகொண்டிருந்தார்.
à Paris ,je disais la messe à six heures.	பரீஸ் பட்டணத்திலே ஆறு மணிக்குப் பூசைபண்ணுவோம்

REM. — On emploie le futur au lieu du passé pour exprimer l'habitude de faire une action.

l'homme *qui* vient.	வருகிற மனுஷன்.
le Père *qui* a parlé.	பேசின சுவாமியார்.
le parroquet *qui* parlera.	பேசுங் கிளி.
l'homme *qui* me frappera.	என்னை அடிக்கும் மனுஷன்.
l'enfant *que* j'ai vu.	நான் கண்ட பையன்.
Dieu *que* nous adorons.	நாம் வணங்குகிற சர்வேசுரன்.
le fils *que* vous avez aimé.	நீர் நேசித்த பிள்ளை.
le prêtre *qui* a dit la messe	பூசை செய்த குரு.

REM. — Quand les participes sont placés avant le substantif, ils se traduisent par *qui*, si la phrase commence par le régime; et par *que*, si elle commence par le nominatif ou sujet (vérifiez).

Dieu qui nous a créés.	நம்மைச் சிஷ்டித்தாரோ அந்தச் சுவாமி.
le traître qui nous a trompés est allé au village.	நம்மை மோசஞ்செய்தானே அந்தத் துரோகி ஊருக்குப் போய்விட்டான்.
le Dieu que nous servons nous donnera le ciel.	சர்வேசுரனைச் சேவிக்கிறோம் அவர் நமக்கு மோக்ஷத்தைக் கொடுப்பார்.

REM.— Ceci est une manière détournée de rendre le *qui* ou le *que* français. Ces sortes de phrases ne sont autre chose que des inversions. On fait deux phrases en tamoul, tandis qu'il n'y en a qu'une seule en français. Cette tournure est très usuelle. Au lieu de dire, comme en français: "le monsieur *qui* est venu hier t'a t-il donné une roupie?" நேற்று வந்த துரை, etc., on dira plus communément: "hier un monsieur est venu...t'a t-il donné une roupie? நேற்று துரை வந்தாரோ...ஒரு ரூபாய் கொடுத்தாரா?

REM.— Dans ces phrases, on ajoute ordinairement au verbe le ஏ emphatique.

je donnerai une roupie à quiconque m'apportera un serpent.	யார் பாம்பு எனக்குக் கொண்டு வருவார்களோ அவர்களுக்கு ஒரு ரூபாய் கொடுப்பேன்.
je punirai celui qui parlera.	யார் பேசுவானோ அவனைத் தண்டிப்பேன்.

ceux qui commettent le péché iront en enfer.	பாவத்தைச் செய்கிறவர்கள் எவர்களோ அவர்களே நரகத்துக்குப் போவார்கள்.

REMARQUEZ l'inversion de ces phrases.

Il y a encore une autre manière très usitée et vulgaire de rendre le *qui* ou le *que* français. Après l'infinitif vrai on ajoute le négatif இல்லை. La phrase paraît négative, mais avec le *ton* convenable elle est parfaitement affirmative et personne ne s'y trompe.

c'est le monsieur qui est venu hier qui m'a donné ce livre.	நேற்று துரை வரவில்லை? அவர் தான் இந்தப் புஸ்தகம் எனக்குக் கொடுத்தார்.
le cheval *que* j'ai acheté est mort.	நான் குதிரை வாங்கவில்லை? ... செத்துப்போச்சு.
le Père *qui* prêcha dans cette église l'année dernière est mort.	போன வருஷம் இந்தக் கோவிலிலே சுவாமியார் பிரசங்கம் பண்ணவில்லை? ... செத்துப் போனார்.
on a pendu Ponnousâmy *qui* tua son père le mois passé.	போனமாசம் பொன்னுசாமி தன் தகப்பனைக் கொலை செய்யவில்லை? தூக்கிட்போட்டார்கள்?

REM. — Il faut observer que la première partie de ces phrases est une vraie interrogation simulée. Dans le premier exemple v. g. on s'adresse à quelqu'un qui était présent, quand le monsieur dont on parle est venu, et on lui demande si un monsieur *n'est pas venu*. Il est censé répondre: " *si, il est venu* "; on continue alors la phrase, ou plutôt, on en fait une nouvelle affirmative. Le plus souvent, après le premier membre de phrase, la personne à qui on s'adresse fait un mouvement de tête. levant le menton de gauche à droite et faisant, en même temps, entendre un léger son (hu) qui signifie dans l'Inde :— *oui oui, oui !*

Evidemment on pourrait rendre ces sortes de phrases parfaitement grammaticales en ajoutant à இல்லை le ஆ ou l' ஓ interrogatifs: நேற்று துரை வரவில்லையா (s. e. வந்

தார்)— அவர்தான், etc. Mais dans la conversation familière on se contente de donner à இல்லை le *ton* de l'interrogation.

Il est clair que l'on ne pourrait pas *ecrire* ces phrases. Il faut qu'il y ait une autre personne qui connaisse ce dont on parle et qui *puisse* affirmer l'action que l'on semble nier.

quatre mois après mon arrivée ici, je parle un peu tamoul.	நான் இங்கே வந்த நாலாம்மாதத் தமிழ்ப்பாஷை கொஞ்சம் பேசுகிறேன்.
j'ai fait cela à l'âge de 23 ans.	நான் பிறந்த இருபத்து மூன்றும் வயசிலே அதைச் செய்தேன்.
il y a quatre mois que je suis venu.	நான் வந்து நாலுமாசம் ஆச்சுது
il y a dix mois que j'ai commencé à étudier le tamoul.	நான் தமிழ்ப்பாஷை படிக்கத்து வக்கினது பத்துமாசம் ஆச்சு.

REM. I. — On emploie le participe passé pour les nombres ordinaux. La traduction littérale des deux premiers exemples serait: la quatrième année que je suis né, etc.

REM. II. — Pour les nombres cardinaux, on emploie le gérondif ou le verbal passé.

Seigneur, je n'aime que vous.	சுவாமீ உம்மை மாத்திரம் நேசிக்கிறேன்.
Seigneur, je ne crois que vous.	சுவாமீ உம்மை விசுவசிக்கிறேன் அல்லாமல் வேறல்ல.
je ne rends grâces qu'à vous.	உமக்குத் தோத்திரம் பண்ணுகிறேன் அல்லாமல் மற்றப்படியல்ல.

REM. — On peut rendre *ne ... que* français: 1° en ajoutant மாத்திரம் (seulement) au régime direct ou indirect; 2° en ajoutant அல்லாமல் aux temps primitifs ou après les verbaux. Dans ce cas, on termine la phrase par வேறல்ல (வேறு — அல்ல) ou par மற்றப்படி அல்ல, autrement non.

depuis l'église jusqu'ici.	கோவில் துவக்கி இங்கே மட்டும்.
depuis cet arbre jusqu'à cette maison.	இந்த மரந் துவக்கி அந்த வீடுவரைக்கும்.
je suis allé jusqu'à Salem	சேலம் வரையில் போனேன்.
il faut lire depuis ici jusque là.	இங்கே துடங்கி அங்கேமட்டும் வாசிக்கவேணும்.
reste ici tant qu'il lira.	அவன் வாசிக்கிறமட்டும் இங்கே இரு.
j'ai examiné jusqu'au bout ce qu'il a écrit: il n'y a pas de faute.	அவன் எழுதினவரையில் பார்த்தேன், தப்பிதம் இல்லை.
attends jusqu'à ce que je vienne.	நான் வருமட்டுங் காத்திரு.
jusqu'à ce qu'il parle.	அவன் பேசுமட்டும்.
jusqu'à ce qu'elle prie.	அவள் வேண்டிக்கொள்ளுமட்டும்.
jusqu'à ce que le chien morde.	நாய் கடிக்குமட்டும்.
jusqu'à ce que nous mourions.	நாம் சாகுமட்டும்.
jusqu'à ce que vous tombiez.	நீங்கள் விழுமட்டும்.
jusqu'à ce qu'ils rient.	அவர்கள் சிரிக்குமட்டும்.
jusqu'à la mort.	மரண பரியந்தம்.
jusqu'à ce que tu partes.	நீ போகும் அளவும்.
jusqu'à ce que je vienne.	நான் வருமளவும்.
tant qu'ils vivront.	அவர்கள் சீவன் உள்ளளவும்.
autant que possible.	கூடுமானமட்டும்.
autant qu'il me-te-lui-nous - vous - leur sera possible.	எனக்கு-உனக்கு-அவனுக்கு-நமக்கு-உங்களுக்கு-அவர்களுக்கு ஆனமட்டும்.
ou:	... ஆன மாத்திரம்.
ou:	... இயன்ற மட்டும்
ou:	... இயன்ற மாத்திரம்.
autant que ceci.	இவ்வளவு — இம்மாத்திரம்.
autant que cela.	அவ்வளவு — அம்மாத்திரம்.
combien?	எவ்வளவு? எம்மாத்திரம்.
jusqu'à ce jour.	இந்நாள் வரைக்கும்.
ou:	இற்றை வரைக்கும்.
tant soit peu.	கொஞ்சம் ஆகிலும்.

ou : எவ்வளவாகிலும்.

REM. *A.* — துவக்கி est le gérondif de துவக்குகிறது: துடங்கி, le gérondif de துடங்குகிறது. On emploie ces deux gérondifs pour exprimer *depuis*.

REM. *B.* — மட்டும் ou மட்டுக்கும் — வரைக்கும் — ou வரையில்—பரியந்தம் se traduisent par *jusque*. Ces trois mots signifient proprement *mesure*.

REM. *C.* — அளவு signifie aussi *mesure*. இவ்வளவு — அவ்வளவு—எவ்வளவு sont composés de இந்த—அந்த—எந்த—அளவு.

REM. *D.* மாத்திரம் a aussi le sens de *mesure*. Employé seul il se traduit par *seulement*. Avec இம்—அம்—எம், il a le sens de: autant que ceci, autant que cela, combien ?

REM. *E.*—பரியந்தம் est un mot relevé qui ne se rencontre guère qu'avec des mots sanscrits.

Les exemples ci-dessus donneront une idée du choix à faire dans l'emploi de ces mots.

REM. — Le mot தனை signifie encore *mesure* comme மட்டு—மாத்திரம்—அளவு, mais il ne s'emploie guère que joint à இந்த — அந்த — எந்த. Ainsi :

autant que ceci.	இத்தனை.
autant que cela.	அத்தனை.
combien?	எத்தனை?

De cette manière, ce mot est d'un usage très fréquent.

Nous allons maintenant donner un certain nombre de phrases pratiques. Nous mettrons en regard une traduction *libre* donnant l'idée de la phrase plutôt que le sens littéral.

இந்த வேலை அகத்தியமாய்ச் செய்ய வேணும்.	il faut nécessairement faire cet ouvrage.
மாம்பழம் அகப்பட்டால் நாலு வாங்கு.	si tu trouves des mangues, achètes-en quatre.

காற்று அகோரமாய் அடிக்குது.	le vent souffle avec violence
வீடெல்லாம் ரொம்ப அசுத்தமாயிருக்குது.	toute la maison est fort sale
அவனை எக்கச்சக்கமாய்த் திட்டினேன்.	je l'ai injurié d'une manière inconvenante
எல்லாம் அலங்கோலமாய் இருக்குது,	tout est en désordre.
தாறுமாறுக்காரர்.	des gens qui vivent en désordre.
சூரியன் அஸ்தமித்தவுடனே மணியடிக்கவேணும்.	il faut sonner la cloche dès le coucher du soleil.
சூரியன் உதயமானவுடனே புறப்படுவோம்.	dès que le soleil se lèvera, nous partirons.
வீட்டுக்கு அஸ்திவாரம் இல்லாவிட்டால் நிற்குமா என்ன?	si la maison n'a pas de fondations, pourra-t-elle tenir debout, dis ?
ஏண்டா அப்படிச்செய்தாய்?	misérable, pourquoi as-tu agi ainsi ?
அந்தக் கல்லு அடுக்கடுக்காகப் போடு.	mets ces pierres en tas.
அடுப்பிலே நெருப்பு இருக்குதா?	y a-t-il du feu dans le fourneau ?
அடுப்பிலே போடு.	mets *sur* le feu.
இதை அடுப்பிலே காயவை.	fais chauffer ceci *sur* le feu.
கொள்ளு இறக்கிப்போடு.	enlève le collou (du feu).
அண்ணாந்து பார்.	regarde en haut.
மிகவும் அதிசயப்பட்டேன்.	je fus très étonné.
எந்த அந்தஸ்திலே இருந்தாலும் ஒரு நாள் சாகவேணும்.	dans quelque position que l'on soit, il faudra mourir un jour.
அந்தி சந்தி செபம்.	la prière du soir et du matin
காலமே.	le matin.
அதிகாலமே.	de bon matin.
சாயங்காலம் — சாயரட்சை.	le soir.
பன்னிரண்டு மணிக்கு.	à midi.
பன்னிரண்டு மணிக்கு மேலே.	après midi.
அபராதம் போடுவோம் பார்.	je t'imposerai une amende, prends garde.
உன் அபிப்பிராயமென்ன?	quelle est ton opinion ?

அவனுக்கு அப்பியாசமில்லை.	il n'a pas l'habitude.
வழக்கப்படி.	selon l'habitude.
மாமூல்படி.	selon l'usage.
அப்பாலே போ.	va au large.
சற்றே பொறு.	attends un peu.
சற்றே அமரிக்கையாயிருக்கிறேன்.	je suis plus calme.
நாளைக்கு அமாவாசி.	c'est demain la nouvelle lune.
சாவியை ராவவேணும்.	il faut limer la clef.
எனக்கு அரம் இல்லை.	je n'ai pas de lime
அவசரமான வேலை.	travail urgent.
அங்கே அவசியமாய்ப் போகவேணும்.	il faut absolument aller là.
அவஸ்தையாயிருக்கிறானாம்.	on dit qu'il est à l'agonie.
அவனவன் தன்தன் மனதின்படி நடக்கிறார்கள்.	chacun fait à sa guise.
அறி முகம்.	un visage connu.
ரூபாய்க்கு எத்தனை அன்னாசு பழம்?	combien d'ananas pour une roupie?
திருச்சபை ஆசாரத்தின் படியே.	selon le rit de la sainte Eglise.
ஆடு மாடு போலே நடக்கிறீர்கள்.	vous vous conduisez comme des brutes.
சுவரிலே ஓர் ஆணி அடி.	plante un clou dans le mur.
சுவாமி எல்லாத்துக்கும் ஆதி காரணமாயிருக்கிறார்.	le Seigneur est la première cause de tout.
ஆதித்தாய் தகப்பன்	la première mère et le premier père.
அங்கே ஆள் அனுப்பு.	envoie un messager là-bas.
தண்ணீர் எல்லாம் ஆவியாய்ப் போம்	toute l'eau se résoudra en vapeur.
தண்ணீர் ஆழமாயிருக்குதா?	l'eau est-elle profonde?
ஆநந்த பாக்கியம் அடைவீர்கள்.	vous obtiendrez un bonheur éternel.
அளவில்லாத பாக்கியம்	un bonheur sans borne.
அந்தத் துரைசாணியுடைய ஆயாள்.	la bonne de cette dame.
உன் ஆயுதங் கொண்டுவா.	apporte tes outils.

மெய்யான சுவாமிக்கு ஆராதனை செய்யாமல் இருக்கிறதென்ன ?	peut-on bien ne pas adorer le vrai Dieu ?
வேறே ஆலோசனை என்ன ?	à quoi bon réfléchir davantage ?
பெரிய போக்கிரி ஆவான்.	il deviendra un grand fripon.
ஆற்றிலே தண்ணீர் வருது	il y a de l'eau dans le fleuve
ஆற்றங்கரையில் தங்குவோம்.	nons nous arrêterons sur le bord du fleuve.
கஸ்தி, வியாதி, துன்பம், இக்கட்டு இதுகளெல்லாஞ் சுவாமி சித்தத்தினாலல்லோ வருது.	c'est par la volonté de Dieu, n'est ce pas, que le chagrin, les maladies, les misères, les malheurs arrivent.
எனக்கு இஷ்டம் இல்லை.	cela ne me va pas
இடைவிடாமல் வேலை செய்யவேணும்.	il faut travailler sans-cesse
சுவாமி கட்டளையிட்டார்.	le seigneur a ordonné.
இதோ பார்.	tiens, regarde.
இந்தா!	tiens ! — holà ! — hé !
உங்களுக்கு இரக்கமில்லையா?	êtes-vous sans pitié ?
இரட்டைப்பிள்ளை.	enfants jumeaux.
இரட்டை மாட்டு வண்டி.	charrette à deux bœufs.
ஒற்றை மாட்டு வண்டி.	— à un bœuf.
இரண்டொரு பழம்.	un ou deux fruits.
இரண்டிலே ஒன்று.	l'un des deux.
இரவும் பகலும் அழுது கொண்டேயிருக்கிறான்.	jour et nuit, il ne fait que pleurer
ராசியாய்ப் போகவேணும்.	il faut faire la paix.
இராட்டினம் அகப்படுமா?	trouvera-t-on une roue (pour filer ou pour puiser de l'eau ?
ஏது! காணோம்.	mais je ne le vois pas du tout.
இருட்டிப்போச்சு.	il fait nuit.
இரட்சகர் உங்கள் இருதயத்திலே வருவார்.	le Sauveur viendra dans votre cœur.
இருப்புக் கம்பி.	une barre (ou fil) de fer.

இருப்பு oblique de இரும்பு

(இ) ரேக்கு வாங்கு.	achète du clinquant.

ரொக்கமாய்ப் பணந் தரவேணும்.	il faut payer comptant.
(இ) லஞ்சம் வாங்கினான்.	il a reçu de l'argent (il s'est laissé suborner.)
என்ன லச்சை!	quelle honte! ou quelle scie!
குதிரைக்கு இலாடங் கட்ட வேணும்.	il faut ferrer le cheval.
குதிரை இலகான் எங்கே?	où est la bride du cheval?
(இ)லேசாயிருக்கும்.	ce sera facile.
ரொம்ப இளைப்பாயிருக்கிறேன்	je suis très fatigué.
சற்றே இளைப்பாறு.	repose-toi un peu.
இறங்கி வா.	descends.
இறா கறி செய்.	fais un cari de chevrettes!
இறைச்சி சாப்பிடு.	mange de la viande.
இனி அப்படிச் செய்யாதே.	désormais, ne fais plus ainsi.
இன்னான் வந்தான் என்று சொல்லு.	dis qu'un tel est venu.
இன்னவின்ன குற்றஞ் செய்தேன் என்று சொல்லி அழுதான்.	après avoir dit qu'il avait fait telle faute, il pleura.
இன்றைய தினந் தேவ நற்கருணை ஆசீர்வாதம் இருக்கும்.	aujourd'hui il y aura Bénédiction du Saint-Sacrement.
அன்றையதினம் பூசை செய்வோம்.	ce jour-là, je dirai la messe.
இன்று தான் துவக்கவேணும்.	il faut commencer aujourd'hui même.
இன்றைக்குக் காசு கொடுக்க மாட்டேன்.	je ne donnerai pas d'argent aujourd'hui.
ஈசல் இருந்தால் மழைபெய்யுமாம்.	quand il y a des fourmis ailées, on dit qu'il pleuvra.
ரொம்ப ஈரமாயிருக்குது.	c'est très humide.
ஈரல் வியாதி.	maladie de foie.
உக்கிராணத்திலே போய் இரண்டு படி அரிசி எடுத்து வா.	va prendre dans le *godown* deux mesures de riz.
மேற்றிராணியார் உத்தரவு கொடுக்க மாட்டார்.	L'évêque ne donnera pas la permission (ou la dispense.)

அவனைப் பத்தடி அடிக்கும்படிக்குஉத்தரவுசெய்தார்	il ordonna de lui donner dix coups.
நன்ருய் உச்சரிக்கவேணும்.	il faut bien prononcer.
உஷ்ணமாயிருக்குது.	il fait chaud.
இது சூடாயிருக்குது.	ceci est chaud.
வெயில் அகோரமாய் அடிக்கும்.	il fera une grande chaleur.
உடம்புக்குச் சவுக்கியமில்லை	je suis indisposé.
உடன்படிக்கை செய்தோம்.	nous avons faït une convention.
உட்காருங்கள்.	asseyez-vous.
உத்தமமனஸ்தாபம்.	la contrition parfaite.
உத்தம மனஸ்தாப மந்திரம்.	l'acte de contrition.
சுவாமி உத்தரவு என்ன?	quelle est la réponse du Père ?
அதென்னமோ!	je ne sais.
அவனுக்கு உத்தியோகமில்லை.	il est sans emploi.
எனக்கு அதிகாரமில்லை.	je n'ai pas le pouvoir.
ரொம்ப உபகாரம்.	je vous remercie bien.
பெரிய உபகாரஞ் செய்தார்.	il m'a rendu grand service.
அதே நல்ல உபாயம்!	voilà un bon moyen !
ஞானோடதேசம்.	catéchisme.

REM.— Composé: de ஞான spirituel — உபதேசம் instruction. Plusieurs mots sanscrits offrent en composition des changements opposés aux règles ordinaires de la langue tamoule. Dans l'exemple ci-dessus அ final de ஞான devient ஓ en s'unissent à உ de உடதேசம்.

சராசரம்.	choses animées et inanimées, douées de mouvement et immobiles.

REM.— Composé de சர et அசரம். அ final de சர et அ initial de அசரம். deviennet ஆ.

தேவாலயம்.	temple de la Divinité.

REM.— Composé de தேவ et ஆலயம்: அ final de தேவ et ஆ initial de ஆலயம் se fondent en un seul ஆ.

சர்வேசுரன்.	le souverain Seigneur.

REM.— Composé de சர்வ et ஈசுரன். அ final de சர்வ et ஈ initial de ஈசுரன் se change en un seul ே.

உபாயமாய்ச் சொல்லு.	dis-lui cela avec précaution, adroitement.
உபாயமாய்ப் பார்த்துக்கொள், குற்றுயிராயிருக்கிறுன்.	examine avec prudence, il est à la dernière extrémité.
பழம் உரித்துச் சாப்படு.	pèle ce fruit et mange-le.
(உ)ருசியில்லே.	il n'a pas de goût.
ருசியாயிருக்கும்.	il aura bon goût.
உருண்டையாயிருக்குது.	cela est rond.
எத்தனை உருப்படி?	combien d'articles, de pièces? (au blanchisseur.)
உலாத்தப்போனுன்.	il est allé se promener.
உலாத்தப்போயிருக்கிறுன்.	il est à la promenade.
குதிரை உலாத்தவேணும்.	il faut promener le cheval.
உள்ளதைச் சொல்லு.	dis les choses comme elles sont.
உள்ளபடி. சொன்னேன்.	j'ai dit la vérité.
உள்ளபடி.	ainsi donc. . (après une démonstration.)
பன்னிரண்டு உருமாலே.	douze mouchoirs.
தலேக்காணி உறை.	taie d'oreiller.
உற்ருர் பெற்ருர்.	les parents et les proches.
உறவின் முறையார்.	les parents, la parenté.
அவர்களுக்குள்ளே. உறவு இருக்குதா?	y a-t-il parenté entre eux?
இல்லே, அந்நியம்.	non, ils sont étrangers l'un à l'autre.
இந்தப் புண்ணுக்கு ஊசி தகரை போட்டால் சீக்கிரமாய் ஆறிப்போம்.	en mettant sur cet ulcère la plante *cassia tora*, il guérira vite
இது ஊசிப்போச்சு.	cela est gâté, pourri.
இந்த ஊசிக்குத் தொளே இல்லேயே.	cette aiguille n'est pas percée
குண்டூசி.	une épingle.
நாளேக்கு ஊதுவார்கள்.	demain on jouera (des instruments de musique.)
ஊறுக்காய்.	des achards.
ஊற்று காணேமே!	je ne vois pas la source.

மழை பெய்தால் தண்ணீர் சுரக்கும்.	s'il pleut, l'eau jaillira.
அரிசி குறைந்து போச்சு.	le riz a *augmenté*.

N. B. Littérallement : a *diminué*. Les Indiens disent qu'une chose a diminué parce qu'on on donne *moins*.

எச்சரிக்கையாயிரு.	prends garde, attention !
பத்திரம்!	doucement, attention !
இதை எடுத்துப்போடு.	enlève, emporte ceci.
எட்டிப்போ.	éloigne toi-au large!
எட்டாது.	on ne peut y atteindre.
எண்ணிப்பேசவேணும்.	il faut réfléchir avant de parler.
அதை எப்படியுஞ் செய்.	fais celá n'importe comment
தோட்டத்திலே எரு போடு.	mets du fumier dans le jardin.
ஏறக்குறைய நூறு பேர்.	environ cent personnes.
சுமார் நாலுமணிக்கு.	vers quatre heures.
மரத்திலே ஏறு.	monte sur l'arbre.
இறங்கிவா.	descends.
ஏற்றம்.	une picote.
இனாம் கொடுப்பேன்.	je te donnnerai un pourboire.
சந்தோஷம் இல்லையா?	n'y a-t-il pas de pourboire ?
இதை ஏலத்திலே போடு.	mets ceci à l'encan.
ஒண்டியாயிருக்கிறேன்.	je suis tout seul.
அவன் ஒண்டிக்காரன்.	il est célibataire.
அதுக்கு ஒத்துக்கொள்ளுகிறையா?	consens-tu à cela ?
கையெழுத்துப் போடு.	appose ta signature.
அதைச் சுவாமிக்கு ஒப்புக்கொடு.	offre cela au Seigneur.
ஒருசந்தி நாள்.	jour de jeûne.
ஒருசந்தி பிடிக்கிறது.	jeûner.
ஒருசந்தியாயிருக்கிறது.	être à jeûn — jeûner.
ஒருவேளை வருவான்.	peut-être qu'il viendra.
சில விசை போவான்.	peut-être partira-t-il.
ஒரே மனிதன்.	un seul homme.
ஒரே ஒரு ரூபாய்.	rien qu'une roupie.
எல்லாம் ஒழுங்காய்ப் போடு.	mets tout en ordre.

ஒக்காளம் இருக்குது.	j'ai mal au cœur.
வாந்தி எடுத்தேன்.	j'ai vomi.
வண்டி ஓட்டத்தெரியுமா?	sais-tu conduire la voiture?
பானையிலே ஓட்டை இருக்குது, இனி உதவாது.	ce vase de terre est fêlé; il ne pourra plus servir désormais.
ரொம்பக் கஷ்டப்பட்டேன்.	j'ai eu beaucoup de peine.
கஷாயங் கசப்பாயிருக்குது.	la tisane est amère.
கசாப்புக் கடை.	la boucherie.
கசாப்புக்காரன்.	le boucher.
ஐயோ! கஞ்சி இல்லை!	hélas! je n'ai rien à manger
கடுகு வாங்கு.	achète de la moutarde.
கடினமாய் அடித்தார்கள்.	on l'abattu cruellement.
கட்டாயஞ் செய்யமாட்டேன்.	je ne veux pas employer la violence.
கட்டாயமாய்ப் போகவேணும்.	il faut absolument partir.
இந்தப் பெண்ணைக் கட்டிக் கொடுப்பார்கள்.	ils marieront cette fille.
குதிரை செம்மையாய்க் கட்டு.	attache bien le cheval.
கண் இல்லையா என்ன!	n'y vois-tu donc pas!
கண்டுபிடிக்கிறையா?	comprends-tu?
கண்டுபிடிக்கிறேன்.	je comprends.
ஒன்றுங் காணோம்.	je ne vois rien.
ஒன்றும் இல்லை.	il n'y a rien.
ஒன்றுஞ் சொல்லாதே.	ne dis rien.
ஒன்றுங் கொடுக்கமாட்டேன்.	je ne te donnerai rien.
ஒருத்தரும் இல்லை.	il n'y a personne.
கதவு சாத்திப்போடு.	ferme la porte.
பூட்டிட்டையா.	as-tu fermé avec le cadenas?
பூட்டிட்டேன்.	oui.
கப்பி வாங்கு.	achète une poulie.
கயிறு அறுந்து போச்சு. (vulg. கவுறு.)	la corde est cassée.
கரணம் போட்டான்.	il a fait la cabriole.
கருவாடு சாப்படாதே.	ne mange pas de poisson desséché.
கர்ப்பஸ்திரி.	une femme enceinte.
ஸ்திரிபோடுகிறது.	repasser (le linge).

உனக்குக் கவனமே இல்லை.	tu es un étourdi.
இந்த வஸ்திரத்தைக் கழற்றிப்போடு.	quitte ce vêtement.
களிம்பு பிடிக்கும்.	le vert-de-gris s'y mettra.
வீட்டிலே கறையான் ரொம்ப.	dans cette maison il y a beaucoup de cariahs.
இது கனமாயிருக்குது.	ceci est lourd.
மொத்தமாயிருக்குது.	c'est épais.
மெலிசாயிருக்குது.	c'est fin, mince, doux.
மெதுவாயிருக்குது.	c'est doux (au toucher).
நாய் மெலிந்து போச்சு.	le chien a maigri.
கனா கண்டேன்.	j'ai eu un rêve.
கனாவிலே பார்த்தேன்.	j'ai vu en songe.
அதைக் காண்பி, பார்ப்போம்.	voyons, montre ça.
இங்கே காத்திரு.	attends ici.
சுவாமி உன்னைக் காப்பாற்றுவார்.	le Seigneur veillera sur toi.
இது காரமாயிருக்குது.	ceci est fort, piquant.
காரமில்லை.	il n'y a pas de piquant.
காய் கனி கிழங்குகளைச் சாப்படுவார்.	il ne mangera que de fruits et des légumes.
காய்ச்சல் எப்போ கண்டது ?	quand la fièvre a-t-elle commencé ?
காயலாயிருக்கிறான்.	il a la fièvre, il est malade.
காய்ச்சல் விட்டுப்போச்சு.	la fièvre a cessé.
அதே காரியம்.	voilà bien l'affaire.
காவலாயிரு போகாதே.	fais sentinelle, ne t'éloigne pas.
பெருங்காற்று அடிக்குது.	il fait grand vent.
கிண்ணாரம் வாசிக்கத் தெரியுமா ?	savez-vous jouer de l'orgue?
இது என்ன கிரயம்? ou என்ன விலை ?	quel est le prix de ceci ?
ரொம்பக் கிரயஞ் சொல்லுகிறாய்.	tu demandes bien cher.
குங்கிலியம் உருக்கி அதிலே வாரு.	fais fondre de la résine et verse-la là dedans.
பல்லு குச்சி தா.	donne un cure-dent.
கத்தியாலே குத்தினான்.	il l'a frappé d'un coup de couteau.

எங்கே பார்த்தாலும் குப்பை இருக்குது.	il n'y a partout que saleté.
கும்பலாக வந்தார்கள்.	ils vinrent en troupe.
சுவாமியைக் கும்பிடு.	salue le père.
குரங்குக்குந் தன் குட்டி பொன் குட்டி.	le singe même trouve son petit charmant.
குலுக்கென்று நகைத்தார்கள்.	ils rirent de tout leur cœur.
இது குழம்பாயிருக்குது.	ceci est épais.
தாமசஞ் செய்யாதே.	ne fais pas de retard.
தாமசம் பண்ணிவந்தாய்.	tu es venu en retard.
குளிராயிருக்குது.	il fait froid.
மலையிலே குளிர் ரொம்ப.	il fait très froid sur la montagne.
தண்ணீர் குளித்தியாயிருக்குது.	l'eau est froide (ou fraîche).
அதைக்குறித்து ஒன்றுஞ் சொல்லாதே.	ne dis rien de cette affaire.
கத்திக்குக் கூர்மை இல்லை.	le couteau n'est pas pointu.
இந்தக்கத்தி சாணை பிடிக்க வேணும்.	il faut repasser, aiguiser, ce couteau (ou ce rasoir).
கூழாமட்டி! (vulgaire.)	poltron! bon à rien!
காரியஞ் சித்திக்கும்.	l'affaire réussira.
சித்தியாகும்.	id id
கை கூடும்.	id id
கைப்பிடி இல்லையே!	il n'y a pas de manche (à un instrument, couteau, bêche, etc..)
கொஞ்சத்துக்குள்ளே வருவேன்.	je viendrai bientôt, sous peu.
உங்களுக்குள்ளே கொள்வினை கொடுப்பினை உண்டா?	vous mariez-vous entre vous ?
அவனைக் கொண்டாடினார்கள்.	ils le louèrent, l'exaltèrent.
தண்ணீர் கொதிக்குது.	l'eau bout.
கொன்னிக்கொன்னிப் பேசுகிறான்.	il parle en bredouillant.
திக்கித் திக்கிப் பேசுகிறாய்.	tu manges les mots.
மூங்கில் கோணலாய் இருக்குது.	le bambou est tordu.
இது. — —	ceci est de travers.

பாவ சங்கீர்த்தனம் செய்கிறது.	se confesser.
— பண்ணுகிறது.	id.
— கொடுக்கிறது.	entendre les confessions.
உங்களுக்குள்ளே எப்போதுஞ் சண்டை சச்சரவு இருப்பானேன்?	pourquoi êtes-vous sans cesse à vous quereller?
அப்பேர்ப்பட்ட நடக்கை கிறீஸ்துவர்களுக்கு ஒண்ணாது ou தகாது.	une telle conduite est indigne de chrétiens.
அக்கியான சடங்கு பண்ணாதே.	ne fais pas des cérémonies païennes
சட்டி பானை எல்லாம் உடைத்துப் போட்டாள்.	elle a brisé tous les vases.
இதைச் செய்ய எனக்குச் சத்தி இல்லை.	je n'ai pas la force de faire ceci.
அதைச் செய்ய அவனுக்குத் திராணி இல்லை.	il n'est pas capable de faire cela
அப்பேர்ப்பட்ட சந்தடி பண்ணாதேயுங்கள்.	ne faites pas tant de tapage.
கூச்சல் ரொம்ப, வேலை கொஞ்சம்.	beaucoup de bruit, peu d'ouvrage.
அதைக் குறித்துச் சமுசியமாயிருக்கிறேன்.	j'ai des doutes à ce sujet.
அதுக்குச் சந்தேகமில்லை.	il n'y a pas de doute à celà.
நாளைக்குச் சப்பரம் வருமா?	demain portera-t-on les brancards (de procession)?
வரும்.	oui.
திருவிழா நடக்குமா?	la fête aura-t-elle lieu?
நடக்கும்.	oui.
நடக்காதாம்.	on dit qu'elle n'aura pas lieu.
கொடி ஏற்றம் எப்போ?	quand hissera-t-on le drapeau?
நல்ல சமயம் இது.	voici une bonne occasion.
சமாதானமாயிருங்கள்.	soyez en paix.
இராசியாய்ப் போகவேணும்.	il faut vous réconcilier.
என் சமுசாரம் வரவில்லை.	ma femme n'est pas venue.
உனக்குச் சம்பந்தமில்லை.	cela ne te regarde pas.

எனக்கென்ன ?	que m'importe ?
உனக்கென்ன ?	que t'importe ?
பறவாயில்லை.	peu importe.
உமக்குச் சம்மதியானால்.	si vous permettez.
சரி!	c'est bien !
அது சரியல்ல.	cela n'est pas bien.
சரிதானா ?	est-ce bien ainsi ?
சரிதான்.	c'est bien.
மெத்த நல்லது.	c'est très bien.
பேஷ் (bèche).	parfait !
இது பேஷாயிருக்குது.	ceci est parfait.
அதைச் சரியாய்ப் போடு.	place cela comme il faut.
குதிரைக்கு ஜீனி போடு.	mets la selle au cheval.
இந்தத் துணி வெளுக்க வேணும்.	il faut blanchir cette toile (laver).
இதைச் சலவைப்பண்ணு.	lave ceci (blanchisseur).
வண்ணானுக்குப் போடு.	donne au blanchisseur.
சலதோஷம்.	un rhume.
சவரம் பண்ண மாட்டேன்.	je ne me raserai pas.
என்ன சலாக்கியம் !	quelle ostentation !
சற்றே பொறு.	attends un peu.
சாக்கிரதையாய் நட.	sois diligent, actif.
சாக்குப் போக்குச் சொல்லாதே.	ne me conte pas des sornettes, ne t'excuse pas.
சாட்சி உண்டா ?	y a-t-il des témoins ?
அத்தாட்சி இல்லை.	il n'y a pas de preuve.
நான் அறிவேன்.	je suis témoin de cela.
சாஷ்டாங்கமாக விழுந்தான்.	il se prosterna.
சாதாரணமாய்.	en général.
வழக்கமாய்.	ordinairement, d'ordinaire.
உனக்குச் சாமார்த்தியம் மெத்த.	tu es fort adroit.
சாயந்தரம்.	le soir.
இன்று சாயந்தரம்.	ce soir.
அன்று சாயந்தரம் ou சாயரட்சை.	ce soir-là.
சாயம் போடுகிறது.	teindre.
கயிறு சிக்கிப்போச்சு.	la corde est embrouillée.
ஏது மாளாது.	oh ! cela n'en finira pas. — Pas moyen de faire cela. Allons donc !

சிபாரிசு.	protection — certificat.
சில்லறை இல்லை.	je n'ai pas de menu monnaie.
சீக்காயிருக்கிறார். (sik. ang.)	il est malade.
சீட்டு எழுதுவேன்.	j'écrirai un billet.
சுருக்காய்-சீக்கிரம்-ஜல்தி.	vite, promptement.
அவனுக்குச் சுவாசம் இல்லை.	il ne peut plus respirer.
சுவை பார்க்கிறது.	goûter un met.
சுறுசுறுப்போடே சுவாமிக்கு ஊழியம் பண்ணு.	sers le seigneur avec zèle— diligence.
பலகை குறைக்க வேணும்.	il faut raccourcir la planche.
தண்ணீர் குறைந்துபோச்சு.	l'eau a baissé — diminué.
என்ன செய்தி ?	quelle nouvelle ?
விசேஷம் இல்லை.	rien de particulier — rien.
சேதம் இல்லை, போ.	allons, il n'y a pas de mal. — il n'y a pas danger de mort.
சொச்சங் கொண்டுவா.	apporte le reste (de l'argent)
ஜன்னல் திற.	ouvre la fenêtre.
ஞாபகம் இல்லை.	je ne me souviens pas.
இது தங்கமும் அல்ல, வெள்ளியும் அல்ல, பித்தளைதான்.	ceci n'est ni de l'or ni de l'argent, c'est du cuivre.
ஈயம் ஆச்சே!	c'est du plomb!
தடை பண்ணாதே.	ne mets pas d'obstacle.
தபால்காரன்.	le facteur.
தர்க்கம் பண்ணலாகாது.	il ne faut pas discuter.
தலைக்காணி காணோமே.	je ne trouve pas l'oreiller.
வண்டி மெத்தை.	coussin de la voiture.
மெத்தையிலே இருக்கும்.	il doit être à l'étage.
தலைக்கீழாக விழுந்தான்.	il tomba la tête la première
குப்புற விழுந்தான்	il tomba la face contre terre
மல்லாக்காய்ப் படுத்துக்கொள்.	couche-toi sur le dos.
அதுக்குத் திஷ்டாந்தம் ஆவது.	en voici une preuve.
அதை ஓர் உவமையினாலே கண்டு பிடிக்கலாம்.	un exemple, comparaison (ou parabole) fera comprendre cela.
அது எங்குங் காணவில்லை.	on ne trouve cela nulle part
தீராவழக்குக்குத் தெய்வமே	dans un procès inextricable,

சாட்சி.	la divinité est le seul témoin.
தீர்வைச் சாவடி.	la douane.
தீர்க்கத்தரிசி சொன்னதுப்படி.	comme dit le prophète.
நாய்க்குத் தீனிபோடு.	donne à manger au chien.
துஷ்ட மிருகங்களைப் போலே.	comme les bêtes sauvages.
அவனுக்குத் துணிகரம் ரொம்ப.	il a une fameuse audace.
துபாக்கி வார் பண்ணியாச்சா?	le fusil est-il chargé?
தொளை-துவாரஞ் செய்.	fais un trou — une ouverture.
அதைத் தரையிலேபோடு.	mets cela à terre.
எனக்குத் தூக்கம் இல்லை.	je n'ai pas sommeil.
தூபகலசம்.	l'encensoir.
மூக்குத்தூள்-பொடி.	du tabac à priser.
தேகமெல்லாஞ் சூடாயிருக்குது.	tout le corps est brûlant.
வரத்தேவையில்லை.	il n'est pas nécessaire de venir.
கடைக்குப் போகத் தேவையில்லையா!	ne faut il donc pas aller au marché?
அவசரம் இல்லை.	ce n'est pas nécessaire.
தையற்காரன் வந்திருக்கிறான்.	le tailleur est arrivé.
என்ன தைரியம்!	quel courage!
ப்ழுது பார்க்க வேணும்.	il faut raccommoder, rapiécer (du linge, des bas, une maison, etc...)
(இ) ல்குவாயிருக்கிறான்.	il est un peu mieux (un malade).
நாயைத் தொடாதே.	ne touche pas le chien.
அதைத்தொட்டு வந்தேன்.	c'est pour cela que je suis venu.
நகம் வாங்கவேணும்.	il faut faire les ongles.
தேள் நசுக்கிப் போட்டேன்.	j'ai écrasé un scorpion.
உனக்கே நஷ்டம்.	c'est toi qui y perds.
எனக்கு லாபம்.	moi j'y gagne.
நலமாயிருக்கும்.	ce sera un bien.
வஸ்திரம் நனைந்து போச்சு.	l'habit est mouillé.

நாளது மாசம் — வருஷம்.	le mois courant — l'année courante.
மரத்திலே நான்றுகொண்டான்.	il se pendit à un arbre.
நிசமா?	est ce vrai? vraiment!
நிசந்தான்.	oui, c'est vrai,
இது நிச்சயம்.	ceci est très vrai — certain.
நித்தஞ் செபம் பண்ணுகிறேன்.	je prie chaque jour.
நித்திய சீவியம் அடைவாய்.	tu obtiendras la vie éternelle.
நீ செய்தது நியாயமல்ல	ce que tu as fait n'est pas juste — raisonnable.
நில்லு.	arrête-toi.
வண்டி நிறுத்து.	arrête la charrette.
குடம் நிறைந்து போச்சு.	le vase est rempli
பாவம் நீங்கிப் போம்.	le péché disparaîtra.
கை நீட்டு.	tends la main.
நாக்கு நீட்டு.	sors la langue.
இது நெருக்கமாயிருக்குது.	ceci est étroit — serré.
நேற்றியாயிருக்குது.	c'est joli.
பசுந்தாயிருக்குது.	c'est beau — magnifique.
பஞ்சகாலம்.	temps de famine.
கருப்பு காலம்.	id id
பட்டா காண்பிப்பேன்.	je montrerai mon titre (à un terrain).
பட்டினியாயிருக்கிறேன்.	je suis à jeûn.
எல்லாம் பதருமல் செய்ய வேணும்.	il faut faire toutes choses sans se presser.
பரிச்சேதம் வரமாட்டார்.	il ne viendra certainement pas.
அவனைப் பரியாசம் பண்ணினார்கள்.	ils se moquèrent de lui.
பரீட்சை ou சோதனை செய்வார்கள்.	ils feront passer l'examen.
இந்த பருப்பு வேவாது.	tu ne me feras pas croire cela.

Litt. ces pois ne cuiront pas (express. plaisante)

எல்லாத்தையும் பறி கொடுத்தார்கள்.	ils furent volés, dépouillés de tout.

பனை மரம்	un palmier.
பனை நுங்கு.	la pulpe des noyaux du palmier.
மட்டை.	branches du cocotier ou du palmier.
நார்.	les fibres id id
ஓலை.	les feuilles id id
தென்ன மரம்.	cocotier.
தென்னந் தோப்பு.	bosquet planté de cocotiers.
தென்னம் பிள்ளை.	jeune cocotier.
தென்னங் கீற்று.	branche tressée du cocotier.
தென்ன மட்டை.	branche du cocotier avec ses feuilles développées.
தென்னங் கள்ளு.	jus du coco.
தென்னோலை.	feuille du cocotier.
மிகவும் பாடுபட்டேன்.	j'ai beaucoup souffert.
உனக்குப் பாதி அவனுக்குப் பாதி.	la moitié pour toi, l'autre moitié pour lui.
சிலுவைப்பாதை செய்.	fais le chemin de la croix.
இத் பாரமாயிருக்கும்.	ce sera lourd.
பிற்பாடு வரலாம்.	vous pourrez venir ensuite.
முழுப் பூசணிக்காய் சோற்றோடே மறைக்கிறுப் போலே.	comme si on cachait une courge entière dans le riz (i. e. une ruse cousue avec du fil blanc.)
பூர்வ காலத்திலே.	dans l'ancien temps.
பெண்டாட்டி vulg. pour பெண்சாதி.	l'épouse, la femme.
காவலாளி ou புருஷன்.	l'époux, le mari.
பேதிக்குச் சாப்பட்டான்.	il a pris une purgation.
சற்றே பொறுத்துவா.	viens dans un instant.
கால்மணி நேரம் பொறுத்து	dans un quart d'heure.
மங்கள வார்த்தை திருநாள்.	l'Annonciation.
நாட்டு மட்டம்.	petit cheval du pays.
மவுனமாயிரு.	garde le silence.
மவுன காலம்	le temps du silence.
மற்றும் நாள்.	avant-hier.
மனது பொருந்திச் செய்தேன்.	je l'ai fait volontairement, exprès.
வேணுமென்று...	id...
மனசறிய...	id...

மனம் அறிந்து...	je l'ai fait volontairem. exprès.
பச்சை சிரிக்கிறான்.	il rit *jaune* (litt. il rit *vert*).
இனாம் — சந்தோஷம்.	présent — pourboire.
கயிறு மாட்டிப்போச்சு.	la corde est emmêlée, accrochée, embrouillée.
மின்மினிப் பூச்சி.	un ver luisant, mouche luisante.
முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டால் கிட்டுமா?	suffit-il du désir d'un cul-de-jette pour que la branche chargée de miel se rapproche ?
தலை முழுகப் போகிறேன்.	je vais me baigner.
முறை இட்டார்கள்.	ils se plaignirent.
மாட்டுக்கு மூக்கணாங் கயிறு இல்லை.	le bœuf n'a pas de corde pour le nez.
மூட்டுப்பூச்சி நசுக்கிப் போடு	écrase la punaise.
வெறுஞ் சோறு.	du riz seul (sans assaisonnement).
வெறுந் தண்ணீர்.	de l'eau seulement.
வெறும் ரொட்டி.	du pin sec.
அவன் மேல் எனக்கு இஷ்டம் இல்லை.	je suis fâché avec lui.
அதைச் செய்ய எனக்கு இஷ்டம் இல்லை.	je n'ai pas envie de faire cela.
வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு இரு கண்ணிலுஞ் சலந் தாரை தாரையாக ஒழுகும்படி கோவென்றலறி அழுதாள்.	se frappant la bouche et le ventre, versant des torrents de larmes, elle sanglota en poussant des cris.
செவ்வே வீட்டுக்கு வந்தேன்	je suis venu droit à la maison.
மாதம் ஒரு நாள்.	un jour chaque mois.
காயா பழமா?	as-tu de bonnes ou de mauvaises nouvelles? (expression familière).
உன்னைக் கூப்பிடக் கை தட்டுவேன்.	je battrai des mains pour t'appeler.
இது விற்கிறதா?	ceci est-il à vendre ?
அசுத்தங்களைப் பொறுக்கித் தின்கிற கோழியைப் போலே.	comme la poule qui ramasse et mange des saletés.

நாளைக்குத்தான் பவுரணமி அல்லவா? (ou பௌரணை)	c'est bien demain la pleine l'une, n'est ce pas?
இதைக் காப்பாற்றி வை.	conserve cela soigneusement.
நான் உன் கையிலே பணம் வாங்கினதே இல்லை.	je n'ai certainement pas reçu d'argent de toi.
பேதி கண்டு இறந்துபோய்விட்டான்.	il fut pris du choléra et mourut.
தாழங் குடை.	un parapluie de feuilles de pandanus.
தோலை விட்டுச் சுளையை விழுங்க வருகிறான்.	il vient avaler la pulpe quand la peau et enlevée (i. e. il jouit du profit sans partager la peine).
சாதம் கறி குழம்பு முதலானவைகளெல்லாஞ் சுடச்சுடவை.	sers le riz, la viande, la sauce et tout le reste bien chaud.
பதறாத காரியஞ் சிதறாது முடியும்.	une chose faite sans précipitation ne peut manquer de réussir.
முன்பின் யோசனைசெய்யாமல் நான் சொன்னதுபடியே செய்.	fais comme je t'ai dit, sans tant de considération.
தலைநோவுங் காய்ச்சலுந் தனக்கு வந்தால் தெரியும்.	quand on a mal de tête ou la fièvre, on le sait bien (i. e. l'expérience est le meilleur des maîtres.
கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டியதென்ன?	â quoi bon des lunettes pour voir une plaie a la main? (i. e. ceci est parfaitement évident).
பொல்லாங்கு உனக்குச் சித்திக்கும்.	il t'arrivera malheur.
இப்படி அவனுக்கு உண்டாய் எத்தனை நாள் ஆச்சு.	depuis quand est-il dans cet état?
இதனால் உனக்குச் சம்பந்தம் என்ன?	qu'as-tu à voir là dedans?
என்மேல் பழிப்போட்டான்	il rejeta la faute sur moi.
அவன் வந்த மறுநாள்.	le lendemain de son arrivée
கெட்டோமே என்று மனஸ்தாபப் பட்டுத் தலைமேல்	tout contrit, il mit les mains sur sa tête et s'en

கையை வைத்து அழுது கொண்டுபோய்விட்டான்	alla en pleurant et en criant : je suis perdu.
மூடத்தனஞ் செய்தாய்.	tu as fait une sottise.
மிஞ்சிக் கேழ்க்கிறானே.	il demande trop !
அதட்டி மிரட்டி யுருட்டிக் கேட்டான்.	menaçant, réprimant, se fâchant, il demanda.
வருவானென்றிருக்கிறேன்.	je crois qu'il viendra.
அது மெய்யென்றிருந்தேன்	je pensais que cela était vrai.
காரியமிருக்கிற வகையறிவேன்.	je sais ce qu'il en est.
கடல் பொங்குது.	la mer est agitée.
கிண்டிகிண்டிக் கேட்கிறது.	tirer les vers du nez.
கிண்டிப்பார்க்கிறது.	chercher à savoir.
இது கழிவாய்ப் போச்சு.	ceci est gâté — au rebut.
நெறுநெறெனப் பல்லைக் கடித்துக் கோவென்றலறிப் பாடு படுவார்கள்.	ils souffriront, grinçant des dents et poussant des cris.
பட்டணத்துக்குப் போகும் படி நேரிட்டது.	il m'arriva d'aller à la ville — j'eus à aller...
அதைச் செய்யக் கருதி.	m'étant mis en tête de faire cela.
செலவுரட்டியாயிருக்கும்.	la dépense sera double.
வழி அடைந்து போச்சு.	la voie est obstruée.
வழியை அடைத்துப் போடாதே.	n'obstrue pas le chemin.
அதுக்கு அடைமானமில்லை	il n'y a pas de remède à cela.
வண்டி தடுமாறி போகுது.	la voiture vacille.
அவனைத் தண்ணீரில் அமிழ்த்த விட்டுவிட்டான்.	il le plongea dans l'eau pour le noyer.
அரைவாசி கொடு	donne-sen la moitié.
அசுத்தமெல்லாம் வாரி எறிந்து போடு.	ramasse et jette au loin toutes ces saletés.
அவனுக்கு நான் அடக்கமாவென்ன ?	suis-je donc son subordonné, voyons ?
வீடு அடியோடே விழுந்தது	la maison s'est écroulée de fond en comble.
கட்டை அடிக்கிறது.	charrier des bûches.
கோழி அடை கத்துது.	cette poule crie la couveuse.
முட்டை அடை வைக்கிறது.	mettre des œufs à couver.

அடைக் கோழி	poule couveuse.
வீச ரூபாய்.	un anna.
அவனவன்செய்த பாவத்துக்கு அவனவனே கணக்குச் சொல்லுவான்.	chacun rendra personnellement compte de ses péchés.
காலத்துக்குத்தக்கதாய் நடக்கவேணும்.	il faut agir selon les circonstances.
பால் பிரிந்து போச்சு.	le lait est tourné.
அதைச் சுவரிலே சாய்த்துப் போடு.	mets cela penché contre le mur.
மடியிலே கனமிருந்தால்தான் பயம்.	c'est quand on porte un trésor sur soi que l'on a peur.
பூச்சாண்டி வந்திருக்கிறான், போகக் கூடாது.	croque-mitaine est là, il ne faut pas sortir (aux petits enfants).
இவ்வளவு அவ்வளவு அல்ல.	cela n'en finissait plus.
எறும்பு ஊரக் கல் தேயும்.	à force de marcher, la fourmi use la pierre.
இறைத்தகிணறு ஊறும் இறையாதகிணறு ஊறாது.	plus on puise de l'eau dans un puits, plus il en vient. (i. e. la générosité enrichit).
பின்கட்டு கட்டிக் கொண்டு திரிகிறான்.	il se promène les mains derrière le dos (il est sans gêne.)
முசலை எழுப்பி நாய் பேலப் போச்சு.	le chien, après avoir fait lever le lièvre s'est mis à crotter (i. e. il est inconstant).
ஆழமாய் வெட்டு.	creuse profondément.
இடங்கண்டு விடாதே.	ne manque pas l'occasion.
சோடு தளதளவென்றிருக்குது ou: குடகுடவென்றிருக்கிறது.	les souliers sont trop larges.

நெருக்கமாயிருக்குது.	ils sont étroits.
சும்மா பட்டாங்கு அடிக்கிறு ய்.	tu me contes des sornettes.
ஒவ்வொரு காசு கொடு.	donne à chacun une cache.
இரண்டு ரண்டு காசு.	deux caches par tête.
மும்மூணு காசு.	trois caches par tête.
நவ்வாலு காசு.	quatre caches id.
அஞ்சஞ்சு காசு.	cinq caches id.
அவ்வாறு காசு.	six caches id.
ஏழேழு காசு.	sept caches id.

எட்டெட்டுக் காசு.	huit caches id.
ஒன்பதொன்பது காசு.	neuf caches —
பத்துப்பத்து காசு.	dix caches —
எக்கச்சக்கமாய்த் திட்டினேன்.	j'ai insulté grossièrement.
மெதுவாய்ப் பேசு.	parle doucement, lentement.
உரக்கப் பேசு.	parle haut, fort.
நான் சொன்னது மெய்யா பொய்யா, சொல் பார்ப்போம்.	Voyons, ce que j'ai dit est-il vrai, oui ou non ?
மேட்டி.	Serviteur, valet de chambre.
தண்ணீர் மொள்ள வேணும்.	Il faut puiser de l'eau.
மோசஞ் செய்யாதே.	ne trompe pas.
மோசம் போனேன்.	j'ai été trompé.
இது காரியத்திலே மோசம் போக வேண்டாம்.	dans cette affaire il ne faut pas se faire illusion.
மோசக்காரன்.	un trompeur.
முதல் — ரண்டாம் வகுப்பு.	la 1re — la 2e division.
ஏணி சாய்ந்திருக்குது.	l'échelle est penchée.
ஏணி சாய்க்காதே.	ne penche pas l'échelle.
சண்டை போட்டார்கள்.	ils se battirent, se disputèrent.
மைதானத்திலே காத்திரு.	attends dans la plaine.
மையத்திலே வை.	mets cela au milieu.
கற்றறிமோழை இவன்.	c'est un pédant.
லோபத்தனம்.	avarice.
வக்கில் இல்லை.	il n'y a pas d'avocat.
எங்கே குடியிருக்கிறாய் ?	où demeures-tu ?
வசூல் பண்ணப்போ.	va faire la quête, recueillir l'argent.
புத்தி இல்லாத வஸ்து.	un être sans raison.
மூன்று காசு வட்டங் கொடுத்தார்கள்.	on a donné trois caches pour le change.
பத்து ரூபாய் வட்டி.	dix roupies d'intérêt.
நாலு வயது பிள்ளை.	nn enfant de quatre ans.
எத்தனை பிராயம் ?	quel âge ?
ஆறு பிராயம்.	six ans.
வரவர.	petit à petit — peu-à-peu.

வரி கொடுத்தேன்.	j'ai payé le tribut — ma quote-part.
வர்த்தமானமெல்லாஞ் சொல்லு.	raconte toute l'affaire.
வலங்கை முகத்தார்.	les parias.
வலங்கமத்தான்.	un paria.
பறைச்சி ou பறைப்பெண்.	une pariate.
வாதி பிரதிவாதி.	le plaignant et l'accusé.
ஜாமீன் கொடுக்கிறது.	donner une caution.
ஜாமீனாயிருக்கிறேன்.	je suis caution—garant.
அதைக்குறித்து விசனப்படுகிறேன்.	cela m'inquète—m'afflige
விசிறி வாங்கு.	achète un éventail.
விசுறு.	évente—fais du vent avec l'éventail.
விசேஷம் இல்லை.	rien de nouveau.
விடியற்காலம்.	l'aube, le point du jour.
அதெல்லாம் விவரமாய்ச் சொல்லு.	raconte tout cela en détail, au long.
உன்னை விலங்கிலே போடுவார்கள்.	on te mettra aux fers—en prison.
கால் வீங்கி இருக்குது.	le pied est enflé.
வீக்கம் இல்லை.	il n'y a pas d'enflure.
வீண் வார்த்தை சொல்லாதே.	ne dis pas des paroles inutiles.
என் பிரயாசமெல்லாம் வீணாய்ப்போச்சு.	tous mes efforts ont été inutiles.
வெந்நீர் ஊற்று.	verse de l'eau chaude.
பச்சைத் தண்ணீர்.	de l'eau froide—fraîche.
சுருக்கத்திலே வெளிப்படுத்துவோம்.	je vais vous expliquer brièvement.
வெற்றிலைப் பாக்கு.	le bétel et la noix d'arec.
சுத்த பைத்தியம்.	une vraie folie.
அவன் சுத்த போக்கிரி.	un vrai chenapan.
அதே நல்ல வேடிக்கை.	voilà un fameux spectacle!
வேர்க்குரு.	des *bourbouilles*.
வேர்வை.	transpiration—sueur.
வேலம்பிசின்.	gomme arabique.
வேலிகட்ட வேணும்.	il faut mettre une haie.
வேவுகாரன்.	un espion.
கார்காலம்.	temps du labourage; 1re

	saison ou பருவம், ஆவணி (mi-août) à புரட்டாசி (septembre).
கூதிர்காலம்.	temps du froid; 2e saison, ஐப்பசி (mi-octobre) à கார்த்திகை (mi-novembre.)
முன்பனிக்காலம்.	saison des premières rosées; 3e saison, மார்கழி (mi-décembre) et தை (mi-janvier).
பின்பனிக்காலம்.	saison des dernières rosées; 4e saison மாசி (mi-février et பங்குனி (mi-mars).
இளவேனிற்காலம்.	saison des chaleurs tempérées; 5e saison) சித்திரை (mi-avril) et வைகாசி (mi-mai).
முதிர்வேனிற்காலம்.	saison des fortes chaleurs, 6e saison; ஆனி (mi-juin) et ஆடி (mi-juillet).
நாய் சூரியனைப்பார்த்துக் குலைத்தால் சூரியனுக்கு நஷ்டமா நாய்க்கு நஷ்டமா?	si un chien aboie au soleil, est-ce le soleil ou le chien qui y perd?
கரும்பு தின்னக் கூலி கேட்கலாமா?	peut-on demander un salaire pour manger des cannes à sucre?
ஒன்றும் அறியேனென்று ஏமாத்தி விட்டேன்.	je l'ai mis dedans en disant que je ne savais rien.
அடிமேல் அடித்தால் அம்மியும் நகரும்.	à force de frapper, la pierre à broyer même se brise.
சூடுண்ட பூனை அடுப்பங்கரை சேராது.	le chat échaudé ne va plus auprès du foyer.
கக்கடக்கச் சிரிக்கிறது.	rire aux éclats.
குலுக்கென்று சிரிக்கிறது.	id. id.
எங்கேயாகிலுங் கறுப்பு நாய் வெள்ளை நாய் ஆகுமா?	un chien noir devient-il jamais blanc!
தாள்ப்பாள் இடு	mets le verrou.
அற்பனுக்குப் பக்ஷியம் வந்	un pauvre diable enrichi

தால் அர்த்தராத்திரியிலே குடை பிடிப்பான்.	prendra un parasol en pleine nuit.
நடுநடுங்கிக் குய்யோ முறையோ வென்று பெருங் கூச்சல் இட்டழுதான்.	tout tremblant, il se mit à hurler, tout en pleurant : oh ! la la !
தலைநோவுங் காய்ச்சலுந் தனக்கு வந்தால் தெரியும்.	l'expérience est le meilleur des maîtres.
பிறத்தியார்க்கு வெட்டின குழி தனக்கே.	on tombe dans la fosse qu'on a creusée pour les autres.
அது வயிற்றுக்குள் போகாமல் பல் இடுக்கிலேதானே புகுந்துகொள்ளும்.	c'est un grain de mil dans la gorge d'un loup.
உனக்கு முட்டாள்பட்டங் கட்டினார்கள் அல்லவா ?	on t'a donné un brevet de stupidité, hein ?
உனக்குச் சீவனம் என்ன ?	comment vis-tu ?
பாலோடு கலந்த நீர் பால் ஆகும்.	dis-moi qui tu hantes, je te dirai qui tu es.
என்ன காணும் ?	qu'est-ce que c'est ?
அப்படியல்லங் காணும்.	il n'en est pas ainsi, ce semble.
உரலில் அகப்பட்டவை உலக்கைக்குத் தப்புமா ?	ce qui est dans le mortier peut-il échapper au pilon ?
சாதிக்குப் பெரிய இழிவு உண்டாகுமே!	ce sera un grand déshonneur pour la caste.
இக்கரைக்கு அக்கரை பச்சை, அக்கரைக்கு இக்கரை பச்சை.	de ce côté-ci (du fleuve) l'autre côté semble vert; de l'autre côté, ce côté-ci semble vert. (i. e. on désire ce qu'on n'a pas.)
காலத்துக்குத் தக்கதாய் நடக்கவேணும்.	il faut agir selon les circonstances.
எறும்பு ஊரக் கல் தேயும்.	i. e. patience passe science.
இறைத்த கிணறு ஊறும், இறையாத கிணறு ஊருது.	i. e. plus on donne, plus on reçoit.
ஆல்போல் தழைத்து, அறுகு போல் வேர் ஓடி, மூங்கில் போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பீர்!	puissiez-vous vous étendre comme le banian, prendre racine comme le chiendent, et avoir une nombreuse famille

	comme le bambou ! (souhait de noces).
சாலி நெல்லுங் கன்னுமியுள்ளது.	le meilleur riz a aussi son enveloppe de paille (personne n'est sans défaut).
இந்த ஆட்டிலே ஈரல் இல்லை	ce mouton n'a pas de foie (i. e. je n'ai pas le sou).
காசென்றால் பிணமும் வாய் திறக்கும்.	le seul mot argent fait ouvrir la bouche aux cadavres même.
குத்திலே அடித்தார்கள், வாயிலே பல்லு போச்சாம்.	on l'a frappé sur le derrière et ses dents sont tombées (i. e. c'est une exagération, une craque).
ஆந்தை சிறிது கீச்சு பெரிது.	le hibou est petit, mais son cri est perçant (i. e. faire de l'embarras, l'important.)
கரணந் தப்பினால் மரணம்.	si vous manquez le saut, vous êtes perdu. i. e. jouer le tout pour le tout).
ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்கவேணும் பாடுகிற மாட்டைப் பாடிக் கறக்கவேணும்.	il faut traire en dansant la vache qui danse, et en chantant, celle qui chante (i. e. il faut se plier aux circonstances).
வாய் பூசுகிறது	graisser la *patte* (la bouche.)
வரவரமாமி கழுதையானது போல்.	de même que la belle-mère devient avec le temps semblable à une ânesse. i. e. on se gâte peu à peu)

En terminant cette méthode de tamoul *vulgaire*, nous croyons devoir faire connaître quelques changements que l'usage a introduits dans la prononciation de certains mots. Quelques-un de ces changements ont déjà été indiqués dans le cours de l'ouvrage.

REM. I.—Avec les verbes en உகிறது, on fait, dans le langage ordinaire, élision de உகி à toutes les personnes de l'indicatif présent.

Ex.: சொல்லுகிறது. — indic. prés. சொல்லுகிறேன், etc.

En élidant உகி, la prononciation vulgaire devient: சொல் ... றேன் — சொல் ... றாய் — சொல் ... றான் — சொல் ... றோம் — சொல் ... றீர்கள் — சொல் ... றார்கள்.

படுத்துகிறது. — indic. prés. படுத்துகிறேன், etc.

On élide உகி et la prononciation devient: படுத் ... றேன் — படுத் ... றாய், etc.

Cette élision n'a pas lieu pour les verbes dans lesquels கிறது ou க்கிறது sont précédés immédiatement de இ — ஈ — எ — ஏ — ய் ou ஐ. Ainsi, il n'y a pas délision dans தணிகிறது — பிடிக்கிறது — வேகிறது — மேய்கிறது — மேய்க்கிறது — வைகிறது — வைக்கிறது, etc.

Cette élision de உகி ne doit pas se faire quand on parle ou que l'on lit en public, comme en chaire: mais dans l'usage ordinaire elle n'a rien de choquant. Un Indien ne dira jamais, par exemple: ஏன் இப்படி பேசுகிறாய்? mais on entendra invariablement: ஏன் இப்படி பேச் ... றை? de même, au lieu de வருகிறேன், il dira: வர் ... றேன்;

கொள்...	றேன்	pour	கொள்ளுகிறேன்;
கூப்பிட்...	றேன்	pour	கூப்பிடுகிறேன்;
சாப்பட்...	றேன்	pour	சாப்படுகிறேன்;
கும்பிட்...	றேன்	pour	கும்பிடுகிறேன்;
போட்...	றேன்	pour	போடுகிறேன்;
நாட்...	றேன்	pour	நாட்டுகிறேன்;

Pour le verbe போகிறது, quoique la finale கிறது soit précédée de ஓ, et non de உ, la syncope போகிறது est admise; le présent de l'indicatif devient: போறேன் — போறாய் — போறான் — போறோம் — போறீர்கள் — போறார்கள்.

REM II. — Dans le langage vulgaire, les Indiens, quand ils parlent à un inférieur, ajoutent à l'impératif le mot அடா, sorte d'interjection signifiant: eh! oh! dis donc! — Seulement ce mot devient tantôt டா, tantôt றா. Il faut bien se garder de parler ainsi soi-même, mais il est bon de connaitre cette tournure. En voici quelques exemples.

போடா — போ அடா — fiche le camp!
வாடா — வா அடா — viens donc!
ஏண்டா — ஏன் அடா — pourquoi, coquin?

Dans le dernier exemple, ன் est changé en ண் à cause du ட suivant.

சொல்ரு — சொல் அடா — dits donc!
பேச்ரு — பேசு அடா — parle donc!
ஏரு — ஏறு அடா — monte donc!
கும்பிட்ரு — கும்பிடு அடா — salue donc!
சாப்பிட்ரு — சாப்படு அடா — mange, allons!
நில்ரு — நில் அடா — debout!
ஒற் — ரு (ot-rha) — ஒற்று அடா — gare de devant!
ஓட்ரு — ஓட்டு அடா — fais courrir (v. g. les bœufs).

REM. III.—Dans un certain nombre de mots, la lettre உ se prononce ஒ. Ex.: குடம், pot, prononcez: ko*D*am.

குளம், étang, — ko*L*am.
குடை, parasol, — ko*D*ei.
குலை, grappe, — kolei.
துரை, un monsieur,— dorè.
குளிர், froid, se prononce coulour.
குழல், tuyau, — coujâ.
விடுகிறது, laisser — vou*D*ougradou.

Il est bon d'observer ces nuances et d'en prendre note. Dites à un palefrenier: குதிரைக்குச் சீனி போடக்கட வாயாக! Il vous comprendra peut-être, mais il haussera les épaules de pitié. S'il hésite, votre catéchiste lui dira: *Djîni pô D ... râ*. Le palefrenier pensera: Voilà du tamoul enfin, parlez-moi de ça! mon maître doit être Chinois!

Sans doute, on doit éviter de se servir d'expressions basses ou triviales, mais il ne faudrait pas non plus, parler toujours comme on le fait en chaire. Par exemple, l'emploi de l'honorifique en parlant de soi-même est parfaitement justifié à l'église et toutes les fois que l'on parle officiellement comme prêtre. On dira: பூசை செய்வோம் — பாவசங்கீர்த்தனங் கொடுப்போம், etc. Mais dans l'usage ordinaire de la vie, nous pensons qu'il vaut mieux éviter ces expressions solennelles. Pourquoi dire சாப்படுகிரோம் — படுத்துவோம் — போறோம் — வந்தோம், etc., quand tout le monde dit: சாப்படுகிறேன் ou

même *சாப்பட் ... றேன் — படுத்துவேன் — போனேன் — வந்தேன்*, etc ?

